செ. கு. எண்: 159 நாள் : 25.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 25.11.2015

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 22.11.2015 அன்று ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பி.மேட்டுப்பாளையம் “அ” கிராமத்தைச் சேர்ந்த திரு கருப்பண்ணன் என்பவரின் மகன் தங்கராஜ்;

சென்னை, பட்டாளத்தைச் சேர்ந்த திரு. ரவிக்குமார் என்பவரின் மகன் ராஜி;

-- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், மேல்விஷாரம் கிராமத்தைச் சேர்ந்த திரு ஆஜிபாஷா என்பவரின் மகன் சுவேல் அகமது; திரு. அபீப்பாஷா என்பவரின் மகன் ரகுமான் பாஷா;

-- ஆகிய இருவரும் ஆற்று வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ஆம்பூர் வட்டம், கடலைகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. புருஷோத்தமன் என்பவரின் மகள் ஷர்மிளா வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **5** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**